

தாம்பரம் மாநகர வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் முன்னால் நகர மன்ற உறுப்பினர் இரா.செல்வகுமார் அவர்களின் தாயார் பெருங்களத்தூர் வடக்கு பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் செ.செல்வபிரகாஷ் தாம்பரம் மாநகர தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.மகேஷ் அவர்களின் பாட்டி ஆர்.தனம்மாள் அவர்கள் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ., கலந்து கொண்டு ஆர்.தனம்மாள் அவர்களுடைய திருவுருவ படத்தினை திறந்து வைத்து வணங்கினார். அதை தொடர்ந்து 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன், கழக வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம், கலந்து கொண்டு திருவுருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி வணங்கினார். உடன் துணை மேயர் ஜி.காமராஜ், மண்டல குழுத்தலைவர்கள் டி.காமராஜ்,எஸ்.இந்திரன் மற்றும் தலைமை கழக பேச்சாளர் சேப்பாக்கம் பிரபாகரன் மாமன்ற உறுப்பினர்கள் ஜெ.சுரேஷ், பி.ஜோதிகுமார், ரமணிஆதிமூலம், எல்.பெரியநயகம், கொடிதாமோதரன், பகுதி கழக நிர்வாகிகள் ஜா.ரவிக்குமார், கி.வேல்மணி ஆர்.செல்வகுமார், மா.கன்னியப்பன், பி.காளியப்பன், ஆர்.ஜீவன், என்.ஷாஜகான், ஓ.கே.தாமஸ், கல்யாணி மன்றாஜ் எம்.வினோத், ஆர்.அகஸ்டின், சீ.செழியன், எஸ்.கார்த்திக், எம்.சூர்யா, வாட்டர் மோகன், நவீன், செ.முகுந்தன், வினோத், ஹரிஹரன், திருமுடிவாக்கம் பாக்கியராஜ்,எம்.நாகராஜ், மனோகர் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு மலர் தூவி வணங்கினார்கள்.

### புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் – மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் தலைவர் 72வது பிறந்தநாள் விழா

# கழக அரசின் சாதனைகளை விளக்கி வீடு வீடாக திண்ணை பிரச்சாரம்!

## கே.கருணாகரன் முன்னிலையில் – சி. பாலாஜி, எம்.என், அஜய்தென்னவன் ஜி. முனிவேல் பங்கேற்பு!

சென்னை, மார்ச்.6-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், முதலமைச்சரும், கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு, கழக அரசின் சாதனைகளை விளக்கி வீடு வீடாக துண்டு பிரசுரங்கள் வழங்கி திண்ணை பிரச்சாரத்தில் கழகத்தினர் ஈடுபட்டனர்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், தலைவர் 72 பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் சாதனைகளை விலக்கி வீடு வீடாக துண்டு பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சி 17வது வட்டம் வட பெரும்பாக்கம் சின்ன தோப்பு பகுதியில் நடைபெற்றது.

17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில், வட்ட நிர்வாகிகள் சி. பாலாஜி, சி.மூர்த்தி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், முன்னாள் கிளை செயலாளர் ஜி. முனிவேல், பாக முகவர்கள் என். நாகராஜன், டி. திவாகர், எம். மைக்கேல், பி. செந்தில், எம். ஜான்சன், ஜி. பூபாலன், எஸ். கமல், கே. சாந்தி, பி.மணி, வக்கீல் எம். என், தளபதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற துண்டு பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சிகளில், வீடு வீடாக சென்று திண்ணையில் அமர்ந்து,கலைஞர் அரசின் சாதனைகள் முதல் கொண்டு திராவிட மாடல அரசின் சாதனைகளான இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிருக்கு இலவச பஸ் பயணம், புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், காலை உணவு திட்டம், எண்ணும் எழுத்தும், நான் முதல்வன், கனவு இல்ல திட்டம் போன்றவை குறித்தும் , அதனால் பொதுமக்களிடம் பயன் பெறுவது குறித்து அறிந்து, பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் துண்டு பிரசுரங்களை விநியோகித்து ஆதரவு திரட்டினார்கள்.

மேலும் வாகன ஓட்டிகள், பொதுமக்கள், வணிக நிறுவனங்கள் ஆகியவற்றிலும் கழக அரசின் சாதனைகள் குறித்து துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் சின்ன தோப்பு செல்வம், ஏழுமலை, செட்டிமேடு, கீர்த்தி, நாகலிங்கம், அரியலூர் வினோத், நாகராஜ், ராஜ்குமார், வி. சுமிர், விஷ்ணு, இ. கார்த்திக், எம். கோவிந்தன், வாசுகி, கஸ்தூரி, செல்வி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகிய துறை சார்ந்த அதிகாரிகளுடன் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி ஆலோசனை நடத்தினார். இக்கூட்டத்தில் குடிநீர், கழிவுநீர் பிரச்சனைகள், சாலை பணிகள், துப்புரவு பணிகள் போன்ற அனைத்து பிரச்சனைகளுக்கும் பொதுமக்களுக்கு சரி செய்து கொடுக்குமாறு உத்தரவிட்டார். அதுபோது இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், மாமன்ற உறுப்பினர் திருமதி.கீதா சுரேஷ் 50வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆர்.சுரேஷ்குமார் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் லோகேஷ், பிரபுதாஸ், குடிநீர் வழங்கல் அதிகாரி கார்த்திகேயன், சிவக்குமார், பிரபு மற்றும் மலர்விழி சென்னை மாநகராட்சி பழனி, சூப்பர்வைசர் நந்தகோபால் மற்றும் பலர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் பகுதி 17வது வட்டம் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ந.பரந்தாமன் தலைமையில் பகுதி அவைதலைவர் வி.திராவிடவீரன் கழக கொடியை ஏற்றினார். இதில் எஸ்.தேவராஜ் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தார். சின்னதோப்பு ஆட்டோ ஸ்டான் அருகில் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.சேகர்ராஜன் ஏற்பாட்டில் 300 நபர்களுக்கு காலை சிற்றூண்டி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் என்.சந்திரன், பகுதி துணை செயலாளர் ஆர்.கௌரிசங்கர்லால் பகுதி பிரதிநிதிகள் கே.ராஜா எஸ். சுகேந்திரேன், பி.என்.குமார், துரை.பசுபதி, துணை செயலாளர்கள் டி.ஸ்டாலின், பி.லதாபிரகாஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் டி.ஜெய்சங்கர், எஸ்.பார்த்தசாரதி, வழக்கறிஞர் ப.கருணாநிதி, பி.அருண்ராஜ், பகுதி அமைப்பாளர் ஆர்.விஸ்வநாதன், ஏ.எஸ்.மாரி, பி.அயோதியன், பி.மணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் கழக தலைவர் – முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பெரம்பூர் பகுதி 34அ வட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் ”சிந்தாமணி அ.பாஸ்கரன் தலைமையில் பொதுமக்களுக்கு மாமன்ற உறுப்பினர் திருமதி ஷர்மிளா காந்தி இனிப்பு வழங்கினார். இந்நிகழ்வில் பெரம்பூர் வடக்கு பகுதி பொருளாளர் அ.செந்தூர்பாண்டியன் மாணவரணி துணை அமைப்பாளர் ஆர்.பி.எஸ் சதீஸ்வரி சிறுபான்மையினர் அணி துணை தலைவர் அசோக்ராஜ், துணை அமைப்பாளர் மகிமை தாஸ், கழக இலக்கிய அணி துணை அமைப்பாளர் ப. சீனிவாசன் மற்றும் 34அ வட்ட துணை செயலாளர் கே.பழனி காசி பொற்செழியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகரம் திருமுல்லைவாயிலில் 9 வது வார்டு பகுதியில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார் ஏற்பாட்டில் ஆயிரம் நபர்களுக்கு புடவை மற்றும் பிரியாணி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தூய்மை பணியாளர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் பிரியாணி வழங்கினார் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஜெயபாலன், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், பகுதி கழக செயலாளர்கள் பேபிசேகர், பொன்.விஜயன், மண்டல குழு தலைவர் அமுதா பேபிசேகர், மாநகர பகுதி கழக நிர்வாகிகள் வார்டு கழகச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் நிர்வாகிகள் உள்ளனர்.

### மண்டலங்கள் 1 முதல் 15 வரையில் கட்டடக் கழிவுகளை அகற்றும் வகையில்

# தீவிரத் தூய்மைப் பணிக்காக கூடுதலாக 57 புதிய வாகனங்கள்!

## மேயர் திருமதி ஆர்.பிரியா கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

சென்னை,மார்ச்.6-

பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலங்கள் 1 முதல் 15 வரையில் கட்டடக் கழிவுகளை அகற்றும் வகையில் தீவிரத் தூய்மைப் பணிக்காக கூடுதலாக டிப்பர் லாரிகள், மினி லாரிகள், ஜே.சி.பி. வாகனங்கள், பாப்காட் வாகனங்கள் உள்ளிட்ட 57 புதிய வாகனங்களை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் நேற்று (05.03.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, நாள்தோறும் 5,900 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திடும் வகையில் அனைத்து போக்குவரத்து மற்றும் உட்புறச் சாலைகள், பேருந்து நிறுத்தங்கள், பூங்காக்கள், மயானபூமிகள், மேம்பாலங்கள், மேம்பாலங்களின் கீழ் உள்ள பகுதிகள் மற்றும் சுரங்கப்பாதைகளில் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குப்பைகள், கட்டடக் கழிவுகள், சுவரொட்டிகள் மற்றும் அனுமதியின்றி வைக்கப்பட்ட விளம்பரப் பதாகைகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலங்கள் 1 முதல் 15 வரையில் கட்டடக் கழிவுகளை அகற்றும் வகையில் தீவிரத் தூய்மைப் பணிக்காக ஏற்கனவே உள்ள 102 வாகனங்களுடன் கூடுதலாக டிப்பர் லாரிகள், மினி லாரிகள், ஜே.சி.பி. வாகனங்கள், பாப்காட் வாகனங்கள் உள்ளிட்ட 57 புதிய வாகனங்கள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியினை சுத்தமாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலும் மாற்றுவதற்கு மாநகராட்சியின் சார்பில் மேற்கொள்ளப்படும் இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் பெரிதும் ஒத்துழைப்பு கொடுத்து, தங்கள் எது மற்றும் தங்கள் சுற்றுப்புறங்களில் உள்ள கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை அகற்ற வேண்டுமெனில் மாநகராட்சியின் 1913 என்ற உதவி எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதன் மீது மாநகராட்சியின் சார்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்காக உருவாக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றப்படும்.

சட்டவிரோதமாக கட்டிட மற்றும் இடிபாட்டு கழிவுகளை சாலைகள், நீர்நிலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் கொட்டுபவர்கள் மீது ரூபாய் 5,000/- அபராத கட்டணம் வசூலிக்கப்பட்டும், தொடர் விதிமுறைகளை மீறுவோர் மீது காவல் துறையின் மூலம் உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த 01.01.2025 முதல் 28.02.2025 வரையிலான இரண்டு மாத காலத்தில் சட்ட விரோதமாக கட்டிட கழிவுகளை கொட்டிய 260 நபர்கள் மீது கண்காணிப்பு படையினரால் ரூபாய் 13 இலட்சம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.



சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் தெற்கு பகுதி 107 வது வட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வட்ட செயலாளர் டி.கருணாநிதி ஏற்பாட்டில் எம்எம்டிஏ. காலனியில்பொதுமக்களுஅறுசுவை உணவு 1000 நபர்களுக்கும், குழந்தைகளுக்கு நலத்திட்ட வழங்கப்பட்டது. விழாவில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதி செயலாளர் ந.இராமலிங்கம் எம்.சி, வட்ட செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,நிர்வாகிகள், கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்;வட்ட நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



மக்கள் போற்றும் மகத்தான தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு கழக மாநில மீனவர் அணி மற்றும் திருவொற்றியூர் தொகுதி தி.மு.க. சார்பில் மாநில மீனவரணி துணைத் தலைவர், கே.பி.சங்கர் ஏற்பாடில் 5000 பொதுமக்களுக்கு நலதிட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் தொகுதிக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### புதுப்பாக்கத்தில் – வீராணம் பரிமாற்ற குழாயில் கசிவு:

# சரிசெய்து மீண்டும் விநியோகம்!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை,மார்ச்.6-

கடலூர் மாவட்டத்திலுள்ள வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகர ஒருசில பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வடக்குத்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுமார் 180 MLD குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு சென்னை நகர குடிநீர் தேவைக்காக 1850 மி.மீ. விட்டம் கொண்ட பிரதான குடிநீர் குழாய் வழியாக 208 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சென்னை நகரின் போரூர் குடிநீர் பகிர்மான நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. போரூர் குடிநீர் பகிர்மான நிலையத்திலிருந்து சென்னையிலுள்ள பல்வேறு பகுதிகளுக்கு குடிநீர் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை (27.02.2025) மாலை வண்டலூர் கேளம்பாக்கம் நெடுஞ்சாலையில் புதுப்பாக்கத்தில் வீராணம் பரிமாற்ற குழாயில் 171 வது கிலோமீட்டர் தொலைவில் கசிவு ஏற்பட்ட காரணத்தால், வீராணம் ஏரியிலிருந்து குடிநீர் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டு இரவு 10.00 மணியளவில் சீர் செய்யும் பணிகள் துவங்கப்பட்டது.

பின்னர், பிரதான குழாயின் கீழ்பகுதியில் ஏற்பட்ட விரிசல் கண்டறியப்பட்டு வெல்டிங் பணிகள் தொடங்கப்பட்டு குடிநீர் கசிவு 03.03.2025 அன்று மதியம் சரிசெய்யப்பட்டது. உடனடியாக வடக்குத்து குடிநீர்சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் வழங்கும் பணி முழுமையாக தொடங்கப்பட்டு மயிலாப்பூர், இராஜா அண்ணாமலைபுரம், நந்தனம் உள்ளிட்ட பகுதிகளுக்கு தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



முதலமைச்சர் – கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா இளைஞரணி சார்பாக பழைய பல்லாவரம் பகுதியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ ஜானகிராமன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்லாவரம் மண்டல தலைவர் பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை கலந்துகொண்டு கழகக் கொடியேற்றி ஏழை எளிய தாய்மார்களுக்கு புடவைகள் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் மரக்கன்றுகள் அறுசுவை உணவுகள் வழங்கினார் அப்பொழுது பகுதி இளைஞரணி அமைப்பாளர் சரத் வெங்கடேசன் வட்டக் கழக செயலாளர் டி.எச். பிரான்சஸ் பால் பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.